## புகலிடச் சிறுகதைகளின் பனுவல்வாசிப்பு

**முனைவர் ஞா. பெஸ்கி**
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
புலமுதன்மையர் - மொழிகள் மற்றும் பண்பாட்டுப்பள்ளி
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி

**முன்னுரை**

எழுபதுகளின் இறுதியில் உருவாகத் தொடங்கிய வாசகர்மையத் திறனாய்வு படைப்பாளியின் மேலாண்மையைப் புறக்கணித்துப் புரட்சி படைத்தது. பனுவலின் வாசிப்பில் வாசகனைத் தனது பங்காளியாக்கிக் கொள்கிறது. சில நேரங்களில் வாசகனை படைப்பாளருக்குப் பதிலாக ஆற்றல் மிக்கதோர் ஆளுமையாக முன்வைக்கிறது. அதாவது முழுமையான நிரந்தரமான ஆளுமையாக, தெளிவான பொருண்மையின் பிறப்பிடமாக வாசகனை நிலைநாட்டுகிறது. படைப்பிலக்கியத்தில் இத்தகைய பனுவலின் வீச்சுகளை அடையாளம் காணவும், பனுவலுக்கும் வாசகருக்கும் இடையேயான உறவுநிலையைக் கண்டறியவும் தேவையான வாய்ப்பை இது உருவாக்கிக் கொடுத்துள்ளது. புகலிடச் சிறுகதைகளில் வாசகரை மையமிட்டதாக அமைந்துள்ள பனுவலின் உறவுநிலையையும் பனுவலின் ஊடாகச் செல்வாக்கு பெற்றுள்ள கருத்துநிலைகளையும் அமைப்பியலின் வெளிச்சத்தில் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**வாசகர் மையத்திறனாய்வின் போக்குகள்**

கடந்த சில ஆண்டுகளில் வாசகமையத்திறனாய்வுக்கோட்பாடு காண்பதில் பல நாடுகளை, மொழிகளைச் சார்ந்த எழுத்தாளர்கள் பங்கேற்றுள்ளனர். நிகழ்வியல் மற்றும் உரைவிளக்கவியல் சிந்தனை கொண்ட ஜெர்மானியர்கள் சிறப்பாகப் பணியாற்றினர். ஆங்கிலோ சாக்ஸன் திறனாய்வும் வாசகமையத்திறனாய்வுப் போக்குகளை வலுப்படுத்துவதில் துணைபுரிந்துள்ளது. ஸூஸன் சலேமான், 'The Reader in the Text – Essays on Audience and interpretation' என்னும் நூலின் முன்னுரையில் உருவம் மற்றும் இயல்பின் பார்வையில் வாசகனை மையமாகக் கொண்ட திறனாய்வுப்போக்குகளை எடுத்துக்காட்டியுள்ளார்.

> ஓர் இலக்கியப் பிரதியினை வாசித்தல் என்பது உணவு ஒழுங்குமுறையை போலச் சிக்கலான மரபுகளைக் கொண்டது. ஆனால் முறையியல் ஏறத்தாழ ஒன்றுதான். நிகழ்ச்சிகள், கதைமாந்தர், குறியீடுகள் போன்றவற்றின் அனுபவப் பொருண்மையைத் தூக்கி முதலில் அடைப்புக்குள் போடவேண்டும் - அதாவது விலக்கிவிடவேண்டும். ஆயின் இந்தத் தனிக்கூறுகள் யாவும் எப்படி நிர்ணயிக்கப்பட்ட செயல்கள் - சேகரங்கள் - முரண்கள் - சமன்பாடுகள் வடிவில் அமைந்துள்ளன. இவற்றின் எல்லைக்குள் வர அனுமதிக்கும் உள்தர்க்கம் என்ன என்பதை வெளிப்படுத்துவதாகவே ஓர் அமைப்பு மைய ஆய்வு அமையும். (ஜக.பூரணச்சந்திரன், 1991, ப. 40)

வாசிப்புச் செயல்பாட்டைக் குறியியல் செயல்பாட்டின் பின்னணியில் க. பூரணச்சந்திரன், கண்டுணர் வாசிப்பு, பின்னிலை வாசிப்பு என்று இருவகையாகப் பாகுபாடு செய்துள்ளார். கண்டுணர்வாசிப்பு என்பதை, "முதல்முறை வாசிக்கும்போதே குறிமீட்பு (decoding) நிகழ்கிறது. இது தொடரியல் விளக்கத்தினைத் தந்துகொண்டே வருகிறது" ஜக.பூரணச்சந்திரன் (2004, பக். 134-135) என்றும் பின்னிலைவாசிப்பு என்பதை, "பிரதியினூடாக முன்னேறும்போதே வாசகர் இப்போது முன்னர்தான் குறிமீட்புச் செய்து வாசித்தவற்றை மாற்றிக் கொண்டே வருகிறார் (மேலது, ப.136) என்றும் விளக்குகிறார்.


**பனுவல் - விளக்கம்**

நாட்டுப்புறவியலின் தொடக்கக்காலத்தில் பனுவல் என்னும் கருத்தாக்கம் வாய்மொழிவழக்காறுகளின் எழுத்துவடிவம் என்று மட்டுமே கருதப்பெற்றது. "ஒரு கதை எடுத்துரைக்கப்படும்போது அது ஒரு நிகழ்த்துதலாக அமைகிறது. அவ்வாறு எடுத்துரைக்கப்பெற்ற கதையை எழுத்துப்பெயர்வு செய்யும்போது எழுதப்பட்ட வடிவம் அக்கதைகூறும் நிகழ்த்துதலின் பனுவல் எனப்படுகிறது" (ஆறு. இராமநாதன் (பதி.) (2003), ப. 109). "ஒரு குறிப்பிட்ட சமிக்ஞைகளின் தொகுப்பு ஏதாவது ஒரு ஊடகத்தின் மூலமாக அனுப்பப்பட்டு ஒரு குறிப்பிட்ட சமிக்ஞைவிதிகளின் தொகுப்பு அல்லது ஒரு குறிப்பிட்ட சமிக்ஞை விதியினால் பெறப்படுமானால் அத்தொகுப்பு பனுவல் எனப்படும்." (எம். டி. முத்துக்குமாரசாமி (1988), ப.15).

பெறுபவன் பொருண்மையைப் புரிந்து கொள்வது வெளிப்பாட்டுநிலை எனப்படும். சொன்மையும் பொருண்மையும் தமக்குள் ஒன்றோடொன்று பொருந்தாமல் ஒன்றை ஒன்று தூரத்தில் நின்று உறவு கொள்ளும் செயல்பாடு பற்றியும் ரோலான்பார்த் கூறியுள்ளார். அப்படித் தூரத்தில் நின்று அவ்விரண்டும் ஏற்படுத்தும் உறவின்பெயர்தான் பனுவல் எனப்படுகிறது. பனுவல் என்னும் சொல்லாடல் முன்பு பிரதி என்னும் பெயரிட்டு அழைக்கப்பெற்றது. எனினும் தவறாகச் சிலரால் இச்சொல் புத்தகம் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டாலும் பனுவல், புத்தகத்திலிருந்து வேறுபட்டது.

> புத்தகம் தாள்களினுள்ளே கறுப்பு மையால் இடப்பட்டுள்ள மொத்த அடையாளங்களைக் குறிக்கிறது. பிரதி என்று ரோலன்பார்த்தால் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள ஒன்று கறுப்பு மைக்கும் பின்னால் உள்ளதாகும். கறுப்புமையால் அடையாளம் இடப்பட்ட புத்தகம் ஓரிடத்தில் தொடங்கி வேறு ஓரத்தில் முடிகிறது. பிரதி தொடர்ந்த உற்பத்தியில் இருக்கும். ஒரு வாசகனையும் ஓர் ஆசிரியனையும் இரகசியமான ஓர் ஒப்பந்தத்தில் வைப்பதின் பெயர் பிரதி. பிரதி குறிப்பானாகவும் (சொன்மை) புத்தகம் குறிப்பீடாகவும் (பொருண்மை) விளங்கும். அதாவது புத்தகமின்றிப் பிரதி இல்லை. (தமிழவன், (1992), ப. 85.) பிரதிக்கு ஆசிரியன் இல்லை. புத்தகத்துக்கு ஆசிரியன் உண்டு.

பார்த் பனுவலைப் பல வாசல்களைக் கொண்டதாகவும் பல மொழிகளின் உறைவிடமாகவும் பல வலைப்பின்னல்களைத் தொடங்குமிடமாகவும் கருதுகிறார். எனினும் அதனை வாசிக்கத் தொடங்கியவுடன் அதன் வாசல்கள் திறக்கத் தொடங்குகின்றன. அதன் பல்வேறு மொழிகள் பல்வேறு பொருண்மைகளைத் தரத் தொடங்குகின்றன. அதன் வலைப்பின்னல்கள் பனுவலுக்குள் உள்ள பல்வேறு உறவுகளைச் சுட்டத் தொடங்குகின்றன. எம். எச். அம்ப்ராஸ் பின்வருமாறு பனுவலை விளக்குகிறார்:



இந்த வரைபடத்தின் மையத்தில் பனுவல் உள்ளது. அதிலிருந்து சமமான இடைவெளியில் பொருண்மை உற்பத்தியில் பங்காளிகளாக உள்ள பிரபஞ்சம், படைப்பாளி, கேட்பவர் (வாசகர்) இருக்கின்றனர். படைப்பாளி வெளிப்படுத்துகிறான். பிரபஞ்சம் என்னும் நிலையில் தான் வெளிப்பாடு நிகழ்கிறது. வாசகர் பொருண்மையை உட்கொள்கிறான். ஆசிரியனின் படைப்பாக இருந்த இலக்கியம் பனுவல் என்றானவுடன் படைப்பாளர் என்ற கருத்தாக்கம் அடிபட்டது. இலக்கியம் படைக்கப்பட்டதல்ல. ஓர் உற்பத்தி என்றவுடன் பனுவல், வரலாற்றின் உற்பத்தி, காலத்தின் உற்பத்தி, மொழியின் உற்பத்தி போன்ற எண்ணங்கள் தோன்றுகின்றன.

**பனுவலின் வாசிப்பு**

பனுவலில் பதிவு செய்ய முயற்சிக்கப்பட்டிருக்கும் சமூக அர்த்தங்களுக்கும் பல்வேறு வகைப்பட்ட வாசகர்களால் தங்களது சமூக அனுபவங்களால் விளங்கிக் கொள்ள உருவாக்கப்பட்ட அர்த்தங்களுக்கிடையேயும் நடைபெறும் பேரமாகவே வாசிப்பு நிகழ்கிறது. என்று குறிப்பிடும் மார்க்ஸ்,

அ) மேலாண்மையை ஏற்றுக்கொள்ளும் வாசிப்பு (Dominated Reading)

ஆ) பேர வாசிப்பு (Negotiated Reading)

இ) எதிர்ப்பு வாசிப்பு ( Resistant reading) (அ.மார்க்ஸ் (1994), ப.136)

என்று அதனைப் பாகுபடுத்தியுள்ளார்.

பனுவலின் முதல் வாசிப்பில் சிலபகுதிகளின் பொருள் உடனே புரிவதில்லை. வாசகனின் மனம் சிறிது நேரத்துக்குள்ளேயே உணர்வு மற்றும் நனவிலி நிலைகளிடையே மாறி மாறிப் பயணிக்கிறது என்பதை அவனே உணர்வதில்லை. இந்தச் செயற்பாங்கு ஒரே நேரத்தில் ஒரு வாசகனுக்கும் மற்றொரு வாசகனுக்கும் இடையே வெவ்வேறாக நிகழ்கிறது. ஏனெனில் பனுவல் தானே இயங்கமுடியாது. சில சிக்கல்களுக்கு வாசகன் அளிக்கும் விடையில்தான் பொருண்மை முழுமை பெறுகிறது.

**புகலிடச் சிறுகதைகளின் பனுவல் வெளிப்படும் சூழல்**

புகலிடச்சிறுகதைகள் பெரும்பாலும் புலம்பெயர்ந்தோரின் மனவுணர்வுளின் வெளிப் பாடாகவே அமைந்துள்ளன. எனினும் பனுவலின் வீச்சையும் பனுவலிடையேயான உறவுநிலைகளையும், பனுவலுக்கும் வாசகருக்கும் இடையேயான தொடர்பு நிலைகளையும் புகலிடச்சிறுகதைகளின் பின்னணியில் ஆராய முடியும்.

''ஒரு பனுவல் அதற்கான சொந்தச்சூழல் இன்றி வாழமுடியாது. ஒரு பனுவல் அதன் சூழலின் பின்னணியில் தான் அர்த்தமுள்ளதாக மாறுகிறது. குறிப்பிட்ட சூழலானது அர்த்தத்தை மட்டுமன்றி அந்தப் பனுவலின் வடிவத்தையும் நிர்ணயிக்கிறது.'' (ஆறு. இராமநாதன் (பதி.), மு.நூ., ப. 407).

புகலிடச்சிறுகதைகளில் பனுவலின் வடிவத்தை நிர்ணயிப்பதில் சூழலுக்கு முக்கிய பங்கு வகிக்கிறது. இப்பனுவலானது மூன்று சூழல்களின் அடிப்படையில் வாசிக்கப்படுகிறது. அவற்றுள் முதலாவதாக அமைவது ஈழத்துச்சூழல்- இரண்டாவது தமிழகச்சூழல் - மூன்றாவது புகலிடச்சூழல் என்பதாகும்.

ஈழத்துச்சூழல் என்பது ஈழத்தின் போர்ச்சூழல்களுக்கிடையே வாழ்ந்து கொண்டிருக்கின்ற வாசகர்களால் வாசிக்கப்படும் பனுவலைச் சுட்டுகிறது. அதாவது ஈழத்திலே உள்ள கல்வியறிவு பெற்ற, இலக்கிய அறிவு பெற்ற மக்களால் எதிர்கொள்ளப்படுகின்ற பனுவலைக் குறிக்கிறது. போராளி இயக்க ஆதரவு ஒ போராளி இயக்க எதிர்ப்பு என்னும் எதிர்வினை கொண்டதாக ஈழத்து வாசகப்பரப்பைப் பனுவலில் அடையாளம் காணமுடிகிறது. மேலும் மலையகத்தார் / இஸ்லாமியர்கள் ஆகிய முரண்பாடு கொண்ட வாசகப்பரப்பையும் இதில் பொருத்திப் பார்க்க வேண்டியுள்ளது. எனினும் பனுவல் எடுத்துரைக்கும் சிங்களப்பேரினவாதம், போரின் கொடுமை போன்ற பனுவலின் பொருண்மையை அறியக்கூடியவர்களாக இருப்பதோடு அவற்றின் சொல்லாடல்கள் அவர்களால் பொருள் உணரத்தக்கனவாக அமைந்துள்ளன.

தமிழகத்துச்சூழல் என்பது ஈழத்தைக் குறித்த- ஈழத்து இலக்கியம் குறித்த ஆர்வலர்களால் மட்டுமே எதிர்கொள்ளப்படுகின்ற பனுவலைக் குறிக்கிறது. புகலிடச் சிறுகதைகள் கிடைப்பதற்கான வாய்ப்புநிலை பரவலாக்கம் பெறத்தொடங்குள்ள தமிழகத்துச் சூழலில் இருவேறு வாசகர்களை இப்பனுவலானது எதிர்கொள்கிறது. 1991இல் நிகழ்ந்த ராஜீவ்காந்தி கொலைக்குப் பிறகு இங்கு ஏற்பட்டுள்ள விடுதலைப்போராளி இயக்க ஆதரவு ஒ விடுதலைப்போராளி இயக்க எதிர்ப்பு என்னும் இருவேறு சார்புநிலைகளைக் கொண்ட வாசகர்களால் எதிர்கொள்ளப்படுகின்ற பனுவலாகவே இது அமைகிறது. எனினும் இப்பனுவல் முன்வைக்கும் அனுபவங்களை வாசகர்கள் எதிர்கொள்ளாத காரணத்தாலும், அதில் இடம்பெற்றுள்ள சொல்லாடல்களின் பொருளை அறியஇயலாத காரணத்தாலும் அந்நியப்பட்டுப் போன நிலையையே உணரமுடிகிறது. இங்குக் குடியேறியிருக்கிற ஈழத்துப்புலம்பெயர்ந்தோர் இதனை எதிர்கொள்கிற திறம் சற்று வேறுபட்டதாக இருக்க வாய்ப்புள்ளது.

புகலிடத்துச்சூழல் என்பது ஈழத்தை விட்டுப் புலம்பெயர்ந்து உலகின் பல நாடுகளில் வாழ்கின்றவர்களால் எதிர்கொள்ளப்படுகின்ற பனுவலைச் சுட்டுகிறது. விடுதலைப் போராளி இயக்க ஆதரவு ஒ விடுதலைப்போராளி இயக்க எதிர்ப்பு என்னும் எதிர்வு நிலையைக் கொண்ட வாசகர்களை இப்பனுவல் எதிர்கொள்கிறது. இப்பனுவல் எதிர்கொள்ளப்படுதலில் பல நாடுகளின் புவியியல் கூறுகளும், பண்பாட்டுக்கூறுகளும் தொடர்புடையனவாக இருத்தலால் பனுவலின் வாசிப்பு வேறுபடுவதற்கான சாத்தியக் கூறுகள் நிறையவே உள்ளன. பனுவல் முன்வைக்கும் பொருண்மையும், பனுவலில் உள்ள சொல்லாடலின் பொருளும் இவர்களோடு நெருக்கமாக அமைந்திருக்கின்ற காரணத்தால் இப்பனுவல் இவர்களால் எளிதில் எதிர்கொள்ளத்தக்கதாக அமைகிறது.

**பனுவலின் பொருண்மை**

அர்த்தங்களைத் தள்ளிப்போடல், வித்தியாசங்களின் விளையாட்டு என்ற குணநலன்களை மொழி மிக இயல்பாகவே தன்னகத்தே கொண்டுள்ளது. இலக்கியம் பனுவலை முதன்மைப்படுத்துவதால் மொழியின் கட்டற்ற விளையாட்டையும் அதன் தனித்தன்மையையும் ஆதரிப்பதாக மாறிவிடுகிறது. இலக்கியப்பனுவல்கள் கட்டமைக்கப்பட்டவையாகவோ அல்லது மையம் உடையவையாகவோ உள்ளன. இம்மையம் ஒரு எண்ணமாக இருக்கலாம். பண்டை இலக்கியங்களில் மையம் அமைக்கப்பட்டதோடு அதைச் சுற்றி மொழியின் கட்டற்ற விளையாட்டு உண்டானதுபோல் தற்கால இலக்கியப் பனுவல்களிலும் ஒரு மையத்தைச் சுற்றி மொழிகளின் விளையாட்டு வடிவமைக்கப்படுகிறது. இதைத்தான் மையத்திற்கான தேவையை வலியுறுத்துகின்ற உணர்வு எனக்குறிப்பிட்டு அதனை நவீன சொல்மையவாதம் என்று தெரிதா குறிப்பிட்டுள்ளார்.

புகலிடச்சிறுகதைகளின் பனுவல்களும் கட்டமைக்கப்பட்டவையாக, மையங்களைக் கொண்டவையாக அமைந்துள்ளன. புகலிடச்சிறுகதைகளின் பனுவல்களில் பின்வரும் மையங்களை ஊகித்தறிய அறியமுடிகிறது.

1. வாழ்க்கை குறித்த அச்சம்,
2. எதிர்காலம் குறித்த கனவுகள்,
3. தொலைந்துபோன கடந்தகாலம்
4. காட்சிப்பதிவுகள்

இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து ‘மனவுணர்வு’ என்னும் ஒற்றைப்படுத்தலுக்குக் கொண்டுவரமுடிகிறது. இத்தகைய பனுவல்களின் பொருண்மையை வாசகர் அறிந்துகொள்வதற்கு ஏற்ப, பனுவலின் சூழலைப் பல சிறுகதைகளில் படைப்பாளர்கள் குறிப்பிட்டுச் செல்கின்றனர். பனுவலுக்குரிய பொருண்மையை உணருவதற்குரிய வாசகனின் உரிமையில் இது சில நேரங்களில் பங்கு போட்டுக்கொள்வதாக அமைகிறது.

**பனுவலின் வீச்சுகள்**

பொருண்மைப்படுத்தலை அமைப்பியல் குறிப்பிடும் பனுவலின் நிலையில் மட்டும் நோக்குவதை விட பனுவலின் வாயிலாக ஆசிரியரின் இருப்புநிலையையும் சார்புநிலையையும் அறிந்துகொள்வது வாசிப்பை வாசகர் மேலும் செழுமைப்படுத்தத்

துணைபுரியும் எனலாம். பனுவலின் வாயிலாக அதன் வீச்சினை அறிந்துகொள்வதில் இடம், காலம் குறித்த சொல்வழக்குகள் முக்கியத்துவம் பெறுகின்றன. சில இடங்களில் படைப்பாளரின் - கதைசொல்லியின் அரசியலை இது அடையாளம் காட்டிவிடுகிறது. இத்தகைய பொருண்மைகளைப் பெறுவதற்குச் சில நிலைகளில் புறநிலைவாசிப்பும் சில நிலைகளில் புதைநிலை வாசிப்பும் தேவைப்படுகின்றன.

புகலிடச்சிறுகதைகளின் பனுவலானது பிறப்பிடம், புகலிடம் என்னும் இரு களங்களில் கதையானது எதில் மையம் கொண்டுள்ளது என்பதை வாசகர் உணர்ந்துகொள்ள அனுமதிக்கிறது.

**இடம் குறித்த சொல்லாடல்**

புகலிடத்தின் வாழ்க்கை முறையும் பிறப்பிடம் குறித்த மனஏக்கமும் பனுவலின் வாயிலாக வெளிப்படுத்தப்படுவதால் களம் குறித்த பதிவு பனுவலில் வெளிப்படுகிறது.

தேவகாந்தனின் 'தீயில் கரைந்த சீதை' என்னும் சிறுகதையின் பனுவலானது பிரான்ஸ் என்பதைக் களமாக வாசகனுக்கு எளிதில் புலப்படுத்திவிடுகிறது. கருணாகர மூர்த்தியின் 'பகையே ஆயினும்' சிறுகதையின் பனுவலைக் கொண்டு களம் எதுவென்பதை முதலில் வாசகன் உணரமுடியவில்லை எனினும் 'எதிர்வீட்டுத் துருக்கிக்காரன்' என்னும் மொழிவழக்கு வாசகனுக்கு அயல்நாடாக இருக்கலாம் என்னும் பொருண்மையை உணர்த்துகிறது. வாசகன் தொடர்ந்து மேலும் வாசித்த போதிலும் எந்தநாட்டு நிகழ்ச்சிகள் என்பதை அவனால் அறியமுடியாதவாறு இக்கதையின் பனுவலானது அமைந்துள்ளது.

**காலம் குறித்த சொல்லாடல்**

புகலிடச்சிறுகதைகளின் கதைநிகழ்வுகள் நிகழும் காலம் எதுவென்பதைப் பனுவல் வாசகனுக்கு நேரிடையாகவோ குறிப்பின் வாயிலாகவோ உணர்த்திவிடுகிறது.

சக்கரவர்த்தியின் 'படுவான் கரை' சிறுகதையில் இடம்பெற்றுள்ள மெலிதான காற்று, உஷ்ணத்தின் வெளிநடப்பு, நாயின் ஊளை, பறவையின் திசைமாற்றம் என்னும் பனுவல் இரவுநேரத்தை உணருவதற்கு வாசகனுக்கு உரிமையை வழங்கியுள்ளது. இரவுநேரம் என்பதை உணருவதில் வாசகனுக்கு இடர்ப்பாடு ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் ''முகம் தெரியாத இருட்டு. ஊர் உறங்கி நெடுநேரமாகி இருந்தது'' என்று பனுவலின் நீட்சி தொடர்வது இரவின் மணிநேரத்தை வெளிப்படுத்தும் ஒன்றாக அமைந்துள்ளது.

**கதைமாந்தர் குறித்த சொல்லாடல்**

வாசகன் பனுவலின் சொல்லாடல் வாயிலாகக் கதைமாந்தர்களின் பண்புநலன்களை அறிந்துகொள்கிறான். எனினும் கதைமாந்தர் குறித்த அவனது மனப்பதிவுகள் அவன் பனுவலோடு தன்னை இணைத்துக்கொள்ளும் செயற்பாங்கின் வாயிலாக வெளிப்படுகிறது. முதல்வாசிப்பின்போது பனுவலானது குறிப்பிட்ட கதைமாந்தரின் தோற்றம், செயல் குறித்த அறிமுகநிலையில் மட்டுமே வாசகனுக்குப் புலப்படுகிறது. இது உடனடியாகத் தோன்றும் பொருண்மையாகவே அமைகிறது. மீண்டும் மீண்டும் பனுவலை வாசிப்புக்கு உட்படுத்தும்போது கதைமாந்தர்களின் மனவுணர்வுகளையும் செயலின் பின்னணியையும் அடையாளம் கண்டறியமுடியும். எனினும் இதனை அறிகின்ற திறம் என்பது வாசகரின் வாசகநிலையைப் பொறுத்து மாறுபடவும் கூடும். மாத்தளைசோமுவின் கச்சத்தீவு சிறுகதையின் பனுவல்களைத் தொடர்ந்து வாசித்துச் செல்லும்போது கச்சாத்தீவு தாத்தா என்னும் பெயருக்கான பின்னணியையும் அவருடைய செயல்களையும் வாசகனால் அறிந்துகொள்ளமுடிகிறது.

**கதைசொல்லியின் பங்கேற்புநிலை**

பனுவலானது கதைசொல்லி கதைகூறும் முறையையும் கதைசொல்லலின் வகையையும் அடையாளப்படுத்துகிறது. தன்மைநிலைக்கதைசொல்லல், படர்க்கை நிலைக் கதைசொல்லல் என்னும் முறையை வாசகனுக்கு உணர்த்துகிறது.

கலாமோகனின் ‘மூன்று நகரங்களின் கதை’யின் பனுவல் தன்மைநிலைக் கதை சொல்லலை உணர்த்துகிறது. எஸ்.பொ.வின் ஒரு யானைக்கதை வாசகரையும் உளப்படுத்துகின்ற உளப்பாட்டுத்தன்மைநிலையில் கதைசொல்லப்படுகிறது என்பதைத் தெரிவிக்கிறது. குமார்மூர்த்தியின் ‘வாழைக்குலை’ சிறுகதையில் கதைசொல்லும் படர்க்கைத்தன்மையை வாசகர் உணர்ந்துகொள்ள முடிகிறது. மேலும் கதைசொல்லி முதன்மைக் கதைமாந்தராகவோ, துணைமைக் கதைமாந்தராகவோ பார்வை-யாளராகவோ பங்கேற்கும் நிலையையும் பனுவலானது உறுதிசெய்கிறது.

**கதைசொல்லியின் அரசியல்**

அனைத்து இலக்கியப் படைப்புக்களும் எழுத்து வடிவில் இருப்பதால் அடையாளமுறையில் சிலவற்றைச் சொல்லும். புதினத்திலும் சிறுகதையிலும் வேறு சில வடிவங்களிலும் இந்த அடையாளங்களிலும் ஒன்றாக ஒரு குரல் வருவதுண்டு. இந்தக் குரல் ஆசிரியனுடையதென்று தவறாகக் கருதப்படுகிறது. ஆனால் இது கதைசொல்லியின் குரலே ஆகும். சிறுகதைக்குள் உள்ள கதைசொல்லியைக் கண்டுபிடித்து சிறுகதையின் குரலைக் கண்டுபிடிப்பதும் அக்குரலின் சாதி, அரசியல் மற்றும் மதசார்புகளைப் பார்ப்பதும் கேட்போரின் தன்மையை அடையாளம் காண்பதும் திறனாய்வாளரின் பணியாக அமைகிறது.

கதைசொல்லியின் நம்பிக்கை, விழுமியங்கள், அறிவுசார் நிலைப்பாடு ஆகியவற்றையும் மக்கள், நிகழ்ச்சிகள், பொருள் ஆகியவை நோக்கிய அவரது மனஉணர்வையும் பனுவலானது வெளிப்படுத்துகிறது. கதைசொல்லியின் சார்புநிலைக்குச் சான்றாக, கிறிஸ்ரியனின் ‘நதியினில்’ சிறுகதையில் உள்ள “நான் பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக, உம்முடைய இராச்சியம் வருக. உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல் பூலோகத்திலும் செய்யப்படுவதாக. இறந்த இந்த ஆத்மா சாந்தி அடைவதாக என்று இரு கைகூப்பி வேண்டிக்கொண்டேன்” (மா. கி. கிறிஸ்ரியன், 2005, ப. 95) என்னும் பனுவலைச் சுட்டலாம். கதைசொல்லியின் குரலில் கிறித்தவசமய சார்புநிலையை உணரமுடிகிறது.

சக்கரவர்த்தியின் ... இதன் இரண்டாம் பாகமும் சிறுகதையில் போராளிகள் மலையகத் தமிழரோடும் இஸ்லாமியர்களோடும் கொண்டிருந்த பகையை எடுத்துக்காட்டும் நிலையில் போராளி இயக்க எதிர்ப்புக்குரலை வாசகன் உய்த்துணரமுடிகிறது. குமார் மூர்த்தியின் ‘உபயம்’ சிறுகதையில் கதைசொல்லியின் சாதிய ஆதிக்கமனவுணர்வை அறிந்துகொள்ளலாம். அவ்வாறே கதைசொல்லியின் அறிவுசார்நிலைப்பாடு, மனவுணர்வு, எள்ளல் தன்மை ஆகியவற்றையும் பனுவல் உணர்த்துகிறது.

**பனுவலுடனான வாசகர் உறவுநிலை**

ஒவ்வொரு கதையாடலிலும் கதைசொல்லி, கதைகேட்குநர் என்னும் இருவேறு நிலைப்பாடுகளைக் கண்டறியமுடியும். வாய்மொழிவழக்காறுகளில் நேரடியான தொடர்பு கொண்டிருந்த இவ்விருவரும் எழுத்து இலக்கியங்களில் மறைமுகமான உறவுநிலையைப் பெற்றிருக்கின்றனர். இத்தகைய இலக்கியங்களின் பனுவலோடு வாசகன் வாசிப்புச் செயற்பாட்டின்போது தொடர்பு கொண்டு தனக்குரிய இடத்தைக் கைப்பற்றிக் கொள்கிறான். கதைசொல்லியின் குரலாலும் நிகழ்வுகளின் தொடர் வரிசையாலும், நிகழ்வுகளை கண்டுணரும் வாசகர் தன்அனுபவங்களோடு பொருத்திப் பார்க்கும் முறையாலும் பனுவலுடனான வாசகர் உறவுநிலை வெளிப்படுகிறது.

எஸ். பொ. ‘பணம்’ என்னும் சிறுகதை இலங்கையில் வெவ்வேறு காலங்களில் நிகழ்ந்த பணபரிமாற்றத்தைப் புனைவோடு பதிவுசெய்துள்ளது. ஆனால் அதனை நிறைவுசெய்யும்போது,

> பழைய காலத்திலே நனவிடை தோய்தல் செய்ய அழைப்பதாகக் கூறி இப்படிப் பாரிய பொருளாதாரச் சிக்கல்களுக்குள் உங்களை மாட்டி வைக்கக்கூடாதுதான். மன்னிப்பை வேண்டுகிறேன். நொடிபோடுவதும் அவிழ்ப்பதும் அந்தக் காலத்தில் மிக முக்கியமான பொழுதுபோக்கு. வட்டவட்டக் குருவி. வாலில்லாத குருவி. அது என்ன? என்ற நொடியைச் சொல்லி வெண்தாடிக் கிழவர் எங்களைத் திகைப்பில் ஆழ்த்தியதுண்டு. காசு

> பற்றி யாழ்ப்பாணத்தில் புழக்கத்திலிருந்த நொடி இது. சில்லறைக் காசுகள் பற்றிய நினைவிலே தோய்ந்து ' ஐம்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட சில்லறைகளும் நாணயங்களும் வாழ்க' என்று தொண்டை கிழியக் கத்தும் உரிமை என்வசத்து என்பதை நீங்கள் மறுக்கமாட்டீர்கள். (எஸ். பொ. (2003), ப. 36)

என்று கதைசொல்லி வெளிப்படுத்தியுள்ளார்.

இதன் வாயிலாகப் பழங்கதைகளை வெளிப்படுத்தும் பனுவல் சில வாசகர்களுக்கு ஆர்வத்தையும் சிலருக்கு எரிச்சலையும் உண்டாக்கிவிடக்கூடும் என்னும் வாசகர் மனவுணர்வின் வேறுபாடு வெளிப்படுகிறது. இந்த மனவுணர்வைக் கருதியே கதைசொல்லியின் சமாதானக்குரலாக இது அமைந்துள்ளது. ''மன்னிப்பை வேண்டுகிறேன்'' என்னும் பனுவலானது வாசகருக்கு நேரிட வாய்ப்பிருக்கின்ற இடர்ப்பாடு என்பதை உணர்த்துவதாகவும் நொடி என்னும் பனுவலானது விடுகதை என்பதைக் குறித்து வழங்கிவரும் ஈழத்துச்சொல்லாடல் என்பதாகவும் அமைந்துள்ளது. எனினும் ''தொண்டை கிழியக் கத்தும் உரிமைஎன்வசத்து என்பதை நீங்கள் மறுக்க மாட்டீர்கள்'' என்னும் பனுவலில் சிறுபிள்ளைகளுக்குக் கதைசொல்லப்படுகிறதா? என்னும் ஐயத்தை வாசகருக்கு ஏற்படுத்திவிடக்கூடாது என்னும் எச்சரிக்கை உணர்வாக அமைகிறது.

**கட்டவிழ்ப்பு**

அமைப்பியலோடு தொடர்புள்ள ஆனால் அமைப்பியலுக்கு எதிரான கட்டவிழ்ப்பு என்ற திறனாய்வு முறை செல்வாக்கு பெற்றிருக்கிறது. அமைப்பியல் எதிர்வுகளை முதன்மைப்படுத்தியது. கட்டவிழ்ப்பியல் இதனை நிராகரித்தது. கட்டுடைத்தல் விமர்சனம் என்பது குறிப்பிட்ட ஒரு இலக்கியப் படைப்புப்பொருளின் அமைப்பை அப்படியே விளக்கிவிடுவதும் ஆகாது. அப்படைப்பின் அமைப்பை அப்படியே பதிவு செய்வதும் ஆகாது. மாறாக கட்டுடைத்தல் விமர்சனம் அவ்விலக்கியப் பனுவலானது எப்படி அமைப்பாக்கம் பெற்றுவிடுகின்றது என்பதை நிகழ்த்திக்காட்டுவதாகும்.

> எந்த ஒரு பிரதியின் அமைப்பாக்கமும் வரலாறு நெடுகவும் வாசகனுக்கு வாசகன் என்கிற அளவில் மாறுபட்டுவருகிற ஒன்றாகும். அதே நேரத்தில் அமைப்பாக்கம் என்பது படைப்பின் சொற்கூட்டத்திலேயே தங்கியிருப்பதும் ஆகும். எனவே ஒரு பிரதியை காரண- காரியத் தொகுப்பு ஒன்றின் விளைவாக கட்டுடைத்தல் விமர்சனம் கருதுவதில்லை. மாறாக அப்பிரதியானது தனது அர்த்தத்தளங்களில் எவ்வாறு சீறிப்பாய்ந்து கொண்டிருக்கிறது என்பதைத்தான் கட்டுடைத்தல் விமர்சனம் காண்கிறது. (நாகார்ஜூனன், 1991, ப. 98)

புகலிடச்சிறுகதைகளில் இத்தகைய கட்டவிழ்ப்பு முயற்சிகளைக் காணமுடிகிறது. எஸ்.பொ.வின் ஆண்மைத்தொகுப்பில் உள்ள எட்டாம் கதையில் கட்டவிழ்ப்பினைக் கண்டறியமுடிகிறது. இயேசுவையும் சாத்தானையும் இணைத்துக் கதை படைத்துள்ளார். 'இயேசு- சாத்தான் கதை'யும் சிங்கராயர்-இன்னாசிமுத்துக்கதையும் மாறி மாறி சொல்லப்படுகின்றன. யோவானிடம் இயேசு திருமுழுக்குப் பெறுகிறார். சாத்தான் அவரை அச்சுறுத்தினான். ஆனால் இயேசுவிடம் தடுமாற்றம் இல்லை. சிங்கராயர்-இன்னாசிமுத்துக் கதைக்குள்ளும் இயேசு-சாத்தான் கதை ஊடுருவியுள்ளது. கடவுளின் நன்மையான படைப்புகளைப் படைக்கச் சாத்தான் தீமைகளைப் படைத்தான். கடவுள் கலங்கவில்லை. ஆனால் சாத்தான் மொழிகள், மதங்களைப் படைத்தான். கடவுளுக்கு இனி வெற்றி இல்லை. கடவுள் சாத்தானுக்கு அடிமையானார் என்று கதை முடிவடைகிறது.

சிலப்பதிகாரம் என்னும் காப்பியத்தின் கதையமைப்பைக் கட்டவிழ்ப்பு செய்து சிறீசுவின் 'சிதைப்பதிகாரம்' படைக்கப்பெற்றுள்ளது. புகூர்க்காண்டம், மனையறம் படுத்தால் வினைத்திறம் கடுத்த காதை, சனியனின் அரங்கேற்றுக் காதையும் அணங்கேற்றுக் காதையும், அந்தவாலை (அமர்) விறைப்புச்செய்காதை, கண்டகனா

(ச்சுருக்கம்), மாதுரைக் காண்டம், வஞ்சித்த காண்டம் என அமைப்பைக் கட்டுடைத்து மேற்கொள்ளப்பெற்ற கட்டவிழ்ப்புமுயற்சியாக இச்சிறுகதை அமைந்துள்ளது. பெண்ணகி, கேவலன், மாதுவி எனக் கதைமாந்தர்களைக் கொண்டு அமைந்த இச்சிறுகதை பாலியல் உணர்வுகளை மையமிட்டு மறுவாசிப்பு செய்யப்பட்டதாகவே அமைந்துள்ளது. மேற்கண்ட கதைகளை முழுமையான கட்டவிழ்ப்பு முயற்சியாகக் கருதமுடிகிறது. ஆனால் பல சிறுகதைகளில் பனுவலின் ஊடாகக் கட்டவிழ்ப்பு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதைக் கவனிக்க முடிகிறது.

சக்கரவர்த்தியின் 'முதிர்கன்னி' சிறுகதையின் பனுவல் கடவுள் பற்றிய பிரமையை உடைக்கும் முயற்சியாக அமைந்துள்ளது. முத்துலிங்கத்தின் 'குங்கிலிக்கலயநாயனார் 'சிறுகதை பக்தியைப் போதையாகக் கட்டுடைத்துள்ளது. மாத்தளை சோமுவின் 'பூக்கடை' சிறுகதை இங்கிலாந்து இளவரசி டயானா குறித்துக் கட்டமைக்கப் பெற்றுள்ள கருத்தாடலுக்கு எதிரான கட்டவிழ்ப்பை வெளிப்படுத்துகிறது. சுமதிரூபனின் 'அகச்சுவருக்குள் நான்' சிறுகதையில் ஆணாதிக்கச் சமூகமானது கட்டமைத்து வைத்திருக்கிற பெண்ணின் உடல் குறித்த பதிவுகள் தகர்க்கப்பெற்றுள்ளன. இவ்வாறு மேலும் பல கதைகளின் பனுவல் ஊடாக கட்டவிழ்ப்பு முயற்சிகளை அறிந்து கொள்ளமுடிகிறது.

**தொகுப்புரை**

புகலிடச்சிறுகதைகளின் பனுவலானது ஈழத்துச்சூழல், தமிழகச்சூழல், புகலிடச்சூழல் ஆகிய மூன்றுசூழல்களில் வாசிக்கப்படுகிறது. ஈழத்துச்சூழல் பார்ப்பன வெள்ளாளர் இருப்புநிலையையும் தமிழகச் சூழலும் புகலிடச்சூழலும் போராளி இயக்க ஆதரவு.ஃ. எதிர்ப்பு என்னும் முரண்நிலையையும் கொண்டு அமைந்துள்ளன. வாழ்க்கை குறித்த அச்சம், எதிர்காலம் குறித்த கனவுகள், தொலைந்துபோன கடந்தகாலம், காட்சிப்பதிவுகள் ஆகியன பனுவலின் மையங்களாக அமைகின்றன. இடம், காலம், கதைமாந்தர்களைக் குறித்த சொல்லாடல்களைப் பனுவலின் வாயிலாக உணரமுடிகிறது. மேலும் கதைசொல்லியின் நம்பிக்கை, விழுமியங்கள், அறிவுசார் நிலைப்பாடு ஆகியவற்றையும் மக்கள், நிகழ்ச்சிகள், பொருள் ஆகியவை நோக்கிய அவரது மனஉணர்வையும், புகலிடச்சிறுகதைகளின் பனுவல் வெளிப்படுத்துகிறது

**துணைநூல்கள்**


1. இராமநாதன். ஆறு (பதி.), நாட்டுப்புறவியல் கோட்பாட்டுப் பார்வைகள், தென்னிந்திய மொழிகளின் நாட்டுப்புறவியல் கழகம், திருவனந்தபுரம், முதற்பதிப்பு, 2003.
2. எஸ். பொ., நனவிடைதோய்தல், மித்ர ஆர்ட்ஸ் மற்றும் கிரியேஷன்ஸ், சென்னை, முதற்பதிப்பு, 2003.
3. கிறிஸ்ரியன், மா. கி., புலமும் புறமும், அடையாளம் வெளியீடு, புத்தாநத்தம், முதற்பதிப்பு, 2005.
4. தமிழவன், தமிழும் குறியியலும், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, முதற்பதிப்பு, 1992.
5. நாகார்ஜுனன், கலாச்சாரம் அ-கலாச்சாரம் எதிர்கலாச்சாரம், கார்முகில் பதிப்பகம், மதுரை, முதற்பதிப்பு, 1991.
6. பூரணச்சந்திரன், க., அமைப்புமையவாதமும் பின்அமைப்புவாதமும், நிகழ் வெளியீடு, கோவை, முதற்பதிப்பு, 1991.
7. பூரணச்சந்திரன், க., இலக்கியப்பயணத்தில் சில எதிர்ப்பாடுகள், சிந்தியன் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு. 2004
8. மார்க்ஸ், அ., உடைபடும் மௌனங்கள், விடியல் பதிப்பகம், உப்பிலிபாளையம், கோவை, முதற்பதிப்பு, 1994
9. முத்துக்குமாரசாமி, எம். டி., பிற்கால அமைப்பியலும் குறியியலும், தமிழ்த்துறை ஆய்வுமையம், தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரி, பாளையங்கோட்டை, முதற்பதிப்பு, 1988.


______